[1986 மே 2

திரு. எலல. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, நகராட்சியின் வருவாயைப் பெருக்குவதற்காக கடைகளையும், கூடங்களையும் கட்டி வருகிறோம். ஆனால் நகராட்சிக்குச் சொந்தமான இடங்கள் மார்க்கெட் பகுதியில் பல இடங்களில் காலியாக இருக்கின்றன. அந்த இடங்களில் கடைகள் கட்டுவதைப் பொறுத்தவரையில் நம்மிடம் பணம் இல்லையென்ற காரணத்தினால் ஓரளவிற்குத்தான் கட்டுகிறோம். பெருத்த அளவிற்கு கடைகள் கட்டி நகராட்சியின் வருவாயைப் பெருக்க வாய்ப்பில்லாமல் இருக்கிறது. இந்த நிலையில் நகராட்சிக்குச் சொந்தமான இடங்களை ஏலம் விட்டு அதன் மூலமாக வருகிற பணத்தை வைத்து கடைகள் கட்டி நகராட்சியின் வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? இதுபோன்று கண்டோன்மென்ட் பகுதியில் 10 கடைகளுக்கு உரிய இடத்தை ஏலம் விட்டு அதிலே வந்த பணத்தை வைத்து இன்றைய தினம் பெருத்த அளவில் 10 கடைகள் கட்டி, மாதம் ஒன்றுக்கு அந்த 10 கடைகள் மூலமாக 5 ஆயிரம் ரூபாய்க்கு மேலாக கன்டோன்மெண்டிற்கு வருவாய் வருவதை அரசு ஆராய்ந்து, அதுபோன்ற நடவடிக்கையை தமிழகம் முழுவதிற்கும் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நகராட்சிக்குச் சொந்தமான இடத்தை விற்று அந்தப் பணத்தைக் கொண்டு இன்னொரு இடத்தில் கட்டடம் கட்டலாம் என்று சொல்கிறார்கள். இடத்தை விற்று கட்டடம் கட்டுவதும் ஒன்றுதான், கடனாக வாங்கி கட்டடம் கட்டி கடனை அடைப்பதும் ஒன்று தான். எனவே இப்போது எந்த இடத்தையும் விற்பதாக அரசுக்கு உத்தேசம் இல்லை.

சென்னை மாநகராட்சியில் கட்டப்படும் புதிய கடைகள்.

631—(*வினா எண். 8969)—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் மாநகராட்சி சார்பில் எந்தெந்த இடங்களில், எத்தனை கடைகள் கட்டப்படுகின்றன?

1986 மே 2]

(ஆ) இக்கடைகளை, நடைபாதை கடை அகற்றப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) சென்னை மாநகராட்சி சார்பில், கோட்டம் 114-ல் உள்ள ஆற்காடு சாலையில் கீழ்ப் பகுதியில் தற்போதுள்ள கடைகளின் மேல், முதல் மாடியில் 21 கடைகளும், கோட்ட எண். 8-ல் உள்ள திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் 9 கடைகளும் தற்போது கட்டப்படுகின்றன.

(ஆ) நடைபாதைக் கடை அகற்றப்பட்டவர்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டால் பரிசீலிக்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி: தலைவர் அவர்களே, இந்தக் கடைகள் எந்த அடிப்படையில் வழங்கப்பட இருக்கின்றன? ஏலம் விடுகிற முறையா அல்லது நியாயமான வாடகை நிர்ணயித்து விடுகிற முறையா? சென்னை மாநகராட்சியில் பல இடங்களில் நெருக்கடியான சாலைகளில் கடைகள் வைத்திருந்தவர்கள் அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே மாநகராட்சிக்கு கடைகள் கோரி விண்ணப்பித்து இருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படையில் நியாயமான தொகை நிர்ணயம் செய்து கடைகள் வழங்கப்படுமா? அதேபோல வாகன போக்குவரத்து இல்லாத சாலைகளில் காலியாக இருக்கிற இடங்களில் இந்த நடைபாதை கடைகளை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் விடுவது என்று அரசு முடிவெடுக்கவில்லை. இருந்தாலும் கூட ஏற்கனவே அப்புறப்படுத்தப்பட்டவர்கள் மனு செய்தால் அதுபற்றி பரிசீலிக்கலாம் என்று தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அரசே விலை நிர்ணயித்து, வாடகை நிர்ணயித்து கொடுப்பதென்றால் போட்டி அதிகமாகி, குறிப்பிட்டவர்களுக்கு கொடுத்து விட்டார்கள் என்று புகார் தான் வரும். மாநகராட்சிக்கு வருவாய் வர வழியில்லாமல் போய் விடும்.

[1986 மே 2

திரு. சைதை சா. துரைசாமி: தலைவர் அவர்களே, மாநகராட்சின் வருவாயைப் பெருக்குவதற்கு ஏற்கனவே தியேட்டர்களை சென்னையில் ஐந்து இடங்களில் கட்டப்படு மென்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு என்னவானது? மாநகராட்சி வருவாயைப் பெருக்க அந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? இப்பொது அகற்றப்பட்ட நடைபாதை வியாபாரிகளுக்கு மாற்று இடமாக, சாலை போக்குவரத்து இல்லாமல், மக்கள் மட்டும் நடக்கிற பகுதியாக இருக்கிற பகுதிகளில் கடைகளை ஒதுக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கையெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாநகராட்சியில் திரையரங்கங்கள் கட்டுவதைப்பற்றிய விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. இப்போது இருக்கிற இடங்களில் கட்டடங்கள் கட்டுவதைப் பற்றி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்த அவைக்கு தகவலுக்காக மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஏற்கனவே சிலர் மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் கடைகளைப் பிடித்துக் கொண்டு, வசூலை தாங்களே செய்து கொண்டு, மாநகராட்சியில் கட்டாமல் இருக்கிறார்கள்.

அதை வசூலிப்பதற்கு நாம் போனால், நீதிமன்றத்திற்குச் சென்று, தடை வாங்கி வைத்துக்கொண்டு 10 ஆண்டுக்காலமாக ஒரு இடத்தில் இப்படி நடைபெற்றுக் கொண்டு இருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். இதுபோன்று தனியார்கள் பெயரில் இப்படி கொள்ளை அடிப்பதை தடுக்க மாநகராட்சி முழு முயற்சியிலே ஈடுபட்டு இருக்கிறது. இதை முதலிலே செய்து முடித்த பிறகு, மற்ற வேலைகளில் ஈடுபடலாம்.

திரு. ஸ்ரீ. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நன்மான் நுழைபுலமும் நுட்பமாக அறிந்தவர். அவர்கள் மாநகராட்சியிலே கடைகளை கட்டி வைத்து முறையாக

கேட்பவர்களுக்கு தரப்படும் என்று சொன்னார்கள். முறையாக கேட்பவர்களுக்குத் தரப்படும் என்றால், வேலையில்லாத பட்டதாரி இளைஞர்களுக்குத் தரப்படுமா? ஊனமுற்ற இளைஞர் களுக்கு தரப்படுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லியது ஏற்கனவே நடைபாதைக் கடைகளில் இருந்து அகற்றப்பட்டவர்கள் மனு கொடுத்தால், அதை அரசு பரிசீலிக்கும் என்று சொன்னேனே தவிர, பட்டதாரி இளைஞர்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும் கடைகளைக் கொடுப்பதாக அரசிடம் இப்போது உத்தேசம் இல்லை.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மூர் மார்க்கெட் மூடப்பட்டு பக்கத்தில் உள்ள அல்லிக் குளத்தில் கடைகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கு ஏதேனும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, கடைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதா? அது எப்போது முடியும் தருவாயில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரம் நீதிமன்றத்தில் இருக்கிற காரணத்தாலே இப்போது நான் எதையும் சொல்வதற்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 632 முதல் 635 வரை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

பகுதிநேர குற்றவியல் வழக்கறிஞர்களின் ஊதியம்

636—(*வினா எண். 4581)—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் பகுதிநேர அரசு வழக்கறிஞர்களாகப் பணியுரியும் குற்றவியல் வழக்கறிஞர்களுக்கு ஊதியம் எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது?

(ஆ) அதை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?